Q. C - 122

## DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

**Name of the Test**

| The Civil and Criminal Judicial test for Members of the Judicial Department-Part - I (Without Books) | 105 |
|---|---|

Maximum Time: Two Hour | Maximum Marks: 80

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 80 number of questions in objective Type.
இந்தக் கணினி வழித் தேர்வானது, 80 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

**b)** Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display

1. Cognizable offence has been defined under
பிடியாணை வேண்டாக் குற்றம் இந்த சட்டப்பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது.

(A) Section 2(1)(f)
பிரிவு 2(1)(f)

(B) Section 2(1)(g)
பிரிவு 2(1)(g)

(C) Section 2(1)(h)
பிரிவு 2(1)(h)

(D) Section 2(1)(k)
பிரிவு 2(1)(k)

2. Appointment of Public prosecutor is dealt under
அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நியமனம் குறித்து கூறும் சட்டப்பிரிவு

(A) Section 19
பிரிவு 19

(B) Section 20
பிரிவு 20

(C) Section 18
பிரிவு 18

(D) Section 21
பிரிவு 21

3. Complaint defined under Section 2(1)(h) of Bharathiya Nagarika Surakshith Sanhitha, 2023
பாரதிய நாகரிக சுரக்ஷா சன்ஹிதா 2023 ன் பிரிவு 2(1)(h)ன் கீழ் வரையறுக்கப்பட்ட குற்றமுறையீடு கீழ்க்கண்டவாறு இருக்கலாம்?

(A) In writing only
எழுத்து பூர்வமாக மட்டுமே

(B) Oral
வாய்மொழியாக

(C) Either in writing or oral
எழுத்து பூர்வமாக அல்லது வாய்மொழியாக

(D) By gestures
சைகைகள் மூலம்

4. 'Summons Case' means a case relating to an offence and not being a
'அழைப்பாணை வழக்கு' என்பது __________ அல்லாத ஒரு குற்றம் தொடர்பான வழக்கு

(A) Warrant case
பிடியாணை வழக்கு

(B) Sessions case
அமர்வு நீதிமன்ற வழக்கு

(C) Complaint case
புகார் வழக்கு

(D) Police case
காவல்துறை வழக்கு

5. Which of the following is correct?
பின்வருவனவற்றில் எது சரியானது?

(A) Magistrate cannot arrest a person
குற்றவியல் நடுவர் ஒருவரை கைது செய்ய முடியாது

(B) Private person cannot arrest a person
தனி நபர் ஒருவரை கைது செய்ய முடியாது

(C) A police officer can arrest a person
ஒரு காவல் அதிகாரி ஒருவரை கைது செய்யலாம்

(D) Both (A) and (B)
(A) மற்றும் (B) இரண்டும்

6. It is mandatory for a police officer to inform the person arrested, the grounds of arrest and right to bail if the offence is not non-bailable under __________ BNSS.
பிணையில் விடாக் குற்றம் தவிர வேறெந்தக் குற்றத்தை செய்து கைது செய்யப்பட்ட நபருக்கு, கைது செய்யப்பட்டதற்கான காரணங்கள் மற்றும் பிணை பெறுவதற்கான உரிமை ஆகியவற்றை ஒரு போலீஸ் அதிகாரி கட்டாயமாகத் தெரிவிக்க வேண்டும் என வலியுறுத்தும் சட்டப்பிரிவு

(A) Section 46
பிரிவு 46

(B) Section 47
பிரிவு 47

(C) Section 48
பிரிவு 48

(D) Section 49
பிரிவு 49

7. Section 53 of BNSS 2023 provides for Medical examination of the arrested person, at the request
பா.நா.சு. சன்ஹிதா 2023, பிரிவு 53ன் கீழ் யாருடைய கோரிக்கையின் பேரில் கைது செய்யப்பட்டவருக்கு மருத்துவ பரிசோதனை செய்யலாம்?

(A) Police officer
காவல் அதிகாரி

(B) Arrestee
கைது செய்யப்பட்டவர்

(C) Victim
பாதிக்கப்பட்டவர்

(D) Magistrate
குற்றவியல் நடுவர்

8. A proclamation requiring a person must be published giving time to the person concerned not less than
பகிரங்க அறிக்கையை வெளியிடும் போது, தலைமறைவான சம்பந்தப்பட்ட நபருக்கு வழங்கப்பட வேண்டிய குறைந்தபட்ச கால அவகாசம்

(A) 30 days
30 நாட்கள்

(B) 10 days
10 நாட்கள்

(C) 20 days
20 நாட்கள்

(D) 15 days
15 நாட்கள்

9. What is the maximum amount of fine a Chief Judicial Magistrate can impose?
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் விதிக்கக்கூடிய அதிகபட்ச அபராதத் தொகை என்ன?

(A) Rs. 10,000
ரூ. 10,000

(B) Rs. 15,000
ரூ. 15,000

(C) Rs. 7,500
ரூ. 7,500

(D) No limit
வரம்பு இல்லை

10. Any sentence of death passed by any Sessions Judge shall be subject to the confirmation by the
எந்தவொரு அமர்வு நீதிபதியாலும் மரண தண்டனை வழங்கப்பட்டால் அது யாரால் உறுதிசெய்யப்பட வேண்டும்?

(A) High Court
உயர் நீதிமன்றம்

(B) Supreme Court
உச்ச நீதிமன்றம்

(C) Governor
ஆளுநர்

(D) President
ஜனாதிபதி

11. Who among the following is/are not required to attend the police station for interrogation?
கீழ்க்கண்டவர்களில் யார் காவல் நிலையத்திற்கு புலன்விசாரணைக்கு ஆஜராகத் தேவையில்லை?

(A) Woman
பெண்

(B) Male under the age of 15 years
15 வயதுக்குட்பட்ட ஆண்

(C) Male above the age of 60 years
60 வயதுக்கு மேற்பட்ட ஆண்

(D) Both (A) and (B)
(A) மற்றும் (B) இரண்டும்

12. Which of the following section of BNSS 2023 mandates that the statements of police not to be signed?
பா.நா.சு.ச 2023ன், பின்வரும் எந்தப் பிரிவு காவல்துறையினரிடம் கொடுக்கப்படும் வாக்குமூலத்தில் கையொப்பமிடக் கூடாது என்று கூறுகிறது?

(A) Section 180
பிரிவு 180

(B) Section 181
பிரிவு 181

(C) Section 182
பிரிவு 182

(D) Section 183
பிரிவு 183

13. Confessions and statements can be recorded by Magistrate during the course of
வாக்குமூலங்கள் மற்றும் குற்ற ஏற்புரையினை குற்றவியல் நடுவரால் எப்போது பதிவு செய்யப்படலாம்?

(A) Investigation
புலன் விசாரணை

(B) Trial
நீதி விசாரணை

(C) Inquiry
விசாரணை

(D) Investigation but before commencement of Inquiry (or) Trial
புலன் விசாரணையின் போது ஆனால் நீதி விசாரணை (அல்லது) விசாரணை தொடங்கும் முன்

14. As per Section 187(9) of BNSS 1973, Investigation in summons Case should be completed within
பாரதிய நாகரிக சுரக்ஷித் சன்ஹிதா 1973ன் பிரிவு 187(9)-ன் படி, அழைப்பாணை வழக்கின்புலன் விசாரணையை எவ்வளவு கால அளவிற்குள் முடிக்க வேண்டும்?

(A) 3 months
3 மாதங்கள்

(B) 6 months
6 மாதங்கள்

(C) 9 months
9 மாதங்கள்

(D) 12 months
12 மாதங்கள்

15. Under this section of BNSS 2023, a Magistrate can order further investigation?
பாரதிய நாகரிக சுரக்ஷித் சன்ஹிதா, 2023ன் எந்தப் பிரிவின் கீழ், ஒரு குற்றவியல் நடுவர் தொடர் புலன்விசாரணைக்கு உத்தரவிட முடியும்?

(A) Section 193(2)
பிரிவு 193(2)

(B) Section 193(5)
பிரிவு 193(5)

(C) Section 193(6)
பிரிவு 193(6)

(D) Section 193(9)
பிரிவு 193(9)

16. Inquiry into the apparent cause of death is termed as
சந்தேகத்திற்குரிய மரணத்திற்கான காரணத்தைப் பற்றிய விசாரணை ———————— என அழைக்கப்படுகிறது

(A) Inquest
இறப்பாய்வு

(B) Post-mortem
பிரேத பரிசோதனை

(C) Autopsy
உடற்கூறாய்வு

(D) Medical examination
மருத்துவப் பரிசோதனை

17. Which of the following section of BNSS 2023 provides that three offences of a same kind within a year may be charged together?
பா.நா.சு.ச 2023ன் பின்வரும் எந்தப் பிரிவு, ஒரு வருடத்திற்குள் செய்யப்பட்ட ஒரே வகையான மூன்று குற்றங்கள் ஒன்றாக சேர்ந்து குற்றம் சாட்டப்படலாம் என்று கூறுகிறது?

(A) Section 241
பிரிவு 241

(B) Section 242
பிரிவு 242

(C) Section 243
பிரிவு 243

(D) Section 244
பிரிவு 244

18. Procedure for Trial before a court of session is provided under
அமர்வு நீதிமன்றத்தின் முன் வழக்கு விசாரணைக்கான நடைமுறை குறித்து விவரிக்கும் சட்டப்பிரிவுகள்

(A) Sections 251-260
பிரிவுகள் 251-260

(B) Sections 260-265
பிரிவுகள் 260-265

(C) Sections 248-260
பிரிவுகள் 248-260

(D) Sections 238-250
பிரிவுகள் 238-250

19. Concept of plea bargaining is dealt under which Chapter of BNSS, 2023?
பாரதிய நாகரிக சுரக்ஷா சன்ஹிதா, 2023-ல் குற்றபேரம் பேசுதல் குறித்து எந்த அத்தியாயம் கூறுகிறது?

(A) Chapter XXI
அத்தியாயம் XXI

(B) Chapter XXII
அத்தியாயம் XXII

(C) Chapter XXIII
அத்தியாயம் XXIII

(D) Chapter XXIV
அத்தியாயம் XXIV

20. The doctrine of "autrefois acquit" and "autrefois convict" is incorporated under this section of BNSS 2023
பா.நா.சு.சன்ஹிதா 2023ன் எந்தப் பிரிவின் கீழ் "முன் விடுதலை வாதம்" மற்றும் "முன் தண்டனை வாதம்" என்ற கோட்பாடு விவரிக்கப்பட்டுள்ளது?

(A) Section 334
பிரிவு 334

(B) Section 335
பிரிவு 335

(C) Section 336
பிரிவு 336

(D) Section 337
பிரிவு 337

21. Under Section 474 of BNSS 2023, a sentence of death may be commuted into
பா.நா.சு.ச 2023ன் பிரிவு 474ன் கீழ், மரண தண்டனை பின்வரும் தண்டனையாகக் குறைக்கப்படலாம்

(A) Life imprisonment only
ஆயுள் தண்டனை மட்டுமே

(B) 14 years of Life imprisonment
14 ஆண்டுகள் ஆயுள் தண்டனை

(C) 20 years of Life imprisonment
20 ஆண்டுகள் ஆயுள் தண்டனை

(D) Any other, punishment provided under the Indian Penal Code, 1860
இந்திய தண்டனைச் சட்டம், 1860ன் கீழ் வழங்கப்படும் வேறு ஏதேனும் தண்டனை

22. Legal aid to the accused at the State expenses is provided under
குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு அரசு செலவில் சட்ட உதவி வழங்கலாம் எனக் கூறும் சட்டப்பிரிவு.

(A) Section 342
பிரிவு 342

(B) Section 341
பிரிவு 341

(C) Section 340
பிரிவு 340

(D) Section 339
பிரிவு 339

23. The special powers of High Court with regard to bail is given under
பிணை தொடர்பாக உயர்நீதிமன்றத்தின் சிறப்பு அதிகாரங்கள் இப்பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது

(A) Section 481
பிரிவு 481

(B) Section 482
பிரிவு 482

(C) Section 483
பிரிவு 483

(D) Section 484
பிரிவு 484

24. The famous case of "D.K. Basu vs State of West Bengal (1997) 6 SCC 642" is relating to
"டி.கே.பாசு எதிர் மேற்கு வங்க மாநிலம் (1997) 6 SCC 642" என்ற புகழ்பெற்ற வழக்கு எது தொடர்புடையது ?

(A) Arrest
கைது

(B) Confession
குற்ற ஏற்புரை

(C) Search
சோதனை

(D) Investigation
புலன்விசாரணை

25. Warrant shall remain in force for
பிடியாணை நடைமுறையில் இருக்கும் காலம்

(A) 2 years
2 ஆண்டுகள்

(B) Until it is cancelled
அது ரத்து செய்யப்படும் வரை

(C) Until it is executed
அது நிறைவேற்றப்படும் வரை

(D) Both (B) and (C)
(B) மற்றும் (C) இரண்டும்

26. When a person who is competent to compound an offence is dead, Under Section 359 of BNSS 2023 compounding?
பா.நா.சு.சன்ஹிதா 2023-ன் பிரிவு 359 கீழ், குற்றத்தை சமரசம் செய்து கொள்ள தகுதியுடையவர் இறந்துவிட்டால், அக்குற்றத்தை சமரசம்

(A) Cannot be done
செய்ய முடியாது

(B) Can be done by State
அரசு தரப்பால் செய்ய முடியும்

(C) Can be done by legal representative without the consent of the court
நீதிமன்றத்தின் அனுமதியின்றி சட்டப்படியான வாரிசுகள் செய்ய முடியும்

(D) Can be done with the consent of the court by the legal representatives
சட்டப்படியான வாரிசுகளால் நீதிமன்றத்தின் ஒப்புதலுடன் செய்ய முடியும்

27. Warrant case means a case relating to an offence punishable with death, imprisonment for life or imprisonment for a term exceeding
பிடியாணை வழக்கு என்பது மரண தண்டனை, ஆயுள் தண்டனை அல்லது ________ ஆண்டுகளுக்கு குறையாத தண்டனை வழங்கக்கூடிய குற்றங்கள் தொடர்பான வழக்கு.

(A) 3 years
3 ஆண்டுகள்

(B) 2 years
2 ஆண்டுகள்

(C) One year
ஒரு வருடம்

(D) One year but less than 2 years
ஒரு வருடம் ஆனால் 2 வருடங்களுக்கும் குறைவானது

28. The word "Magistrate" mentioned in Section 175(3) of BNSS 2023 means a
பாரதிய நாகரிக சுரக்ஷா சன்ஹிதா 2023ன் பிரிவு 175(3) ல் குறிப்பிடப்பட்டுள்ள "குற்றவியல் நடுவர்" என்ற வார்த்தை குறிப்பது

(A) Judicial Magistrate
குற்றவியல் நீதித்துறை நடுவர்

(B) Special Executive Magistrate
சிறப்பு நிர்வாகத்துறை நடுவர்

(C) Sub-divisional Magistrate
நிர்வாகத்துறை நடுவர்

(D) District Magistrate
மாவட்ட நடுவர்

29. As per Section 23, of BNSS 2023 a Metropolitan Magistrate has the power to pass sentence of imprisonment for a term not exceeding
பா.நா.ச.சன்ஹிதா 2023ன் பிரிவு 23 படி, ஒரு பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு __________ மிகாமல் சிறைத்தண்டனை விதிக்க அதிகாரம் உள்ளது

(A) 7 years
7 ஆண்டுகள்

(B) 2 years
2 ஆண்டுகள்

(C) 3 years
3 ஆண்டுகள்

(D) One year
ஒரு வருடம்

30. Arrest means
கைது என்றால்

(A) Every compulsion or physical restraint
கட்டாயப்படுத்துதல் அல்லது தடுத்துநிறுத்துதல்

(B) Total restraint and complete deprivation of liberty
முழுமையான கட்டுப்பாடு மற்றும் சுதந்திரத்தை முழுமையாகப் பறித்தல்

(C) Hand cuffing
கை விலங்கிடுதல்

(D) Confinement in jail
சிறையில் அடைத்தல்

31. A police officer arresting a person may carry out the personal search of the person arrested as provided under BNSS 2023
பா.நா.சு.ச 2023-ன் எந்தப் பிரிவின் கீழ் ஒரு நபரைக் கைது செய்யும் காவல்துறை அதிகாரி கைது செய்யப்பட்ட நபரை சோதனை மேற்கொள்ளலாம்?

(A) Section 50
பிரிவு 50

(B) Section 49
பிரிவு 49

(C) Section 51
பிரிவு 51

(D) Section 52
பிரிவு 52

32. It is mandatory to produce the arrested person before the Magistrate within 24 hours of his arrest under
எந்தப் பிரிவின் கீழ், கைது செய்யப்பட்ட நபரை கைது செய்த 24 மணி நேரத்திற்குள் மாஜிஸ்திரேட் முன் ஆஜர்படுத்துவது கட்டாயமாகும்.

(A) Section 56
பிரிவு 56

(B) Section 58
பிரிவு 58

(C) Section 57
பிரிவு 57

(D) Section 59A
பிரிவு 59A

33. Object of investigation is
புலன்விசாரணையின் நோக்கம்

(A) To punish accused
குற்றம் சாட்டப்பட்டவர்களை தண்டிக்க

(B) To acquit accused
குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவிக்க

(C) To collect evidence
ஆதாரங்களை சேகரிக்க

(D) To convict accused
குற்றத்தை நிருபிக்க

34. An order of life imprisonment may be passed by
ஆயுள் தண்டனை உத்தரவு வழங்க அதிகாரம் படைத்தவர்

(A) A Chief Judicial Magistrate
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்

(B) A Sessions Judge
அமர்வு நீதிபதி

(C) A Metropolitan Magistrate
பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவர்

(D) Any Magistrate of first class
முதல் வகுப்பு குற்றவியல் நீதித்துறை நடுவர்

35. Classification of offences given in the BNSS under
பா.நா.சு.சன்ஹிதா கீழ் எந்த பகுதியில் குற்றங்களின் வகைப்பாடு கொடுக்கப்பட்டுள்ளது?

(A) Ist Schedule
முதல் அட்டவணை

(B) IInd Schedule
இரண்டாம் அட்டவணை

(C) Section 320
பிரிவு 320

(D) Section 321
பிரிவு 321

36. Who can withdraw a case from the prosecution under Section 360, BNSS?
பிரிவு 360 பா.நா.சு.சவின் கீழ் குற்ற வழக்கை யார் திரும்பப் பெறலாம்?

(A) State Government
மாநில அரசு

(B) Public Prosecutor In charge of a case with permission of court
நீதிமன்றத்தின் அனுமதியுடன் சம்பந்தப்பட்ட அரசு வழக்கறிஞர்

(C) Public Prosecutor In charge of a case even without permission of court
நீதிமன்றத்தின் அனுமதியில்லாமல் சம்பந்தப்பட்ட அரசு வழக்கறிஞர்

(D) Central Government
மத்திய அரசு

37. There shall be no appeal by a convicted person where a Magistrate of first class passes only a Sentence of fine, not exceeding?
முதல் வகுப்பு குற்றவியல் நீதித்துறை நடுவர் ரூ ———— மிகாத அபராதத் தண்டனையை மட்டும் வழங்கினால், தண்டனை பெற்ற ஒருவரால் மேல்முறையீடு செய்ய இயலாது.

(A) One hundred rupees
நூறு ரூபாய்

(B) Two hundred rupees
இருநூறு ரூபாய்

(C) Three hundred rupees
முன்னூறு ரூபாய்

(D) Two hundred and fifty rupees
இருநூற்று ஐம்பது ரூபாய்

38. An arrested person has a right to consult a legal practitioner of his choice. The consulation with the lawyer may be in the presence of a
கைது செய்யப்பட்ட நபர் தனது விருப்பப்படி ஒரு வழக்குரைஞரைக் கலந்தாலோசிக்க உரிமை உண்டு. கலந்துரையாடல் ————— முன்னிலையில் இருக்கலாம்

(A) Judicial officer
நீதித்துறை நடுவர்

(B) Police officer but not within limits of his hearing
காவல் அதிகாரி ஆனால் அவரது கேட்கும் தொலைவில் இல்லை

(C) Police officer within the limits of his hearing
காவல் அதிகாரி முன் ஆனால் அவரது கேட்கும் தொலைவில்

(D) Independent person
சுதந்திரமான நபர்

39. Section 94 of BNSS 2023 does not apply to the
பா.நா.சு.ச 2023ன் பிரிவு 94 எவருக்கு பொருந்தாது?

(A) Complainant
குற்றமுறையீட்டாளர்

(B) Accused
குற்றம் சாட்டப்பட்டவர்

(C) Witness
சாட்சி

(D) Victim
பாதிக்கப்பட்டவர்

40. Who among the following is not competent under Section 95 of BNSS 2023 to order the Postal or Telegraphic authority to deliver a document/thing?
பா.நா.சு.சன்ஹிதா 2023ன் பிரிவு 95ன் கீழ் அஞ்சல் அல்லது தந்தித்துறை வசமுள்ள ஒரு ஆவணம்/பொருளை ஒப்படைக்க உத்தரவிட கீழ்க்கண்டவர்களில் யாருக்கு அதிகாரம் உள்ளது?

(A) District Magistrate
மாவட்ட நீதிபதி

(B) Judicial Magistrate
குற்றவியல் நீதித்துறை நடுவர்

(C) Sessions Judge
அமர்வு நீதிபதி

(D) Chief Judicial Magistrate
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்

41. Section 33 and 34 of BNSS 2023 make it mandatory to give information regarding commission of certain offences such information can be given to a
பா.நா.சு.சன்ஹிதா 2023ன் பிரிவு 33 மற்றும் 34 சில குற்றங்கள் நடைபெறுவது தொடர்பான தகவல்களை இவரிடம் வழங்குவதை கட்டாயமாக்குகிறது.

(A) Magistrate
நீதித்துறை நடுவர்

(B) Police officer
காவல் அதிகாரி

(C) Either to Magistrate or police officer
நீதித்துறை நடுவர் அல்லது காவல் அதிகாரியிடம்

(D) Both of them simultaneously
மேற்கூறிய இருவரிடமும் ஒரே நேரத்தில்

42. Section 90 of BNSS 2023 authorizes issuance of warrant
பா.நா.சு.சன்ஹிதா 2023ன் பிரிவு 90 பிடியாணை வழங்குவது

(A) In lieu of summons
அழைப்பாணைக்கு பதிலாக

(B) In addition to summons
அழைப்பாணையுடன் சேர்த்து

(C) Both in lieu of or in addition to summons
அழைப்பாணைக்கு பதிலாக அல்லது கூடுதலாக

(D) In addition to proclamation
பகிரங்க அறிக்கையுடன் சேர்த்து

43. Joining of two or more independent and respectable inhabitants of the locality in which the place is to be searched is the mandate under
சோதனை செய்யும் போது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சுதந்திரமான மற்றும் மரியாதைக்குரிய அந்த குறிப்பிட்ட பகுதியில் வசிக்கும் நபர்களின் முன்னிலையில் நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தும் சட்டப்பிரிவு

(A) Section 103(1)
பிரிவு 103(1)

(B) Section 103(2)
பிரிவு 103(2)

(C) Section 103(3)
பிரிவு 103(3)

(D) Section 103(4)
பிரிவு 103(4)

44. The registration of the case about the commission of a cognizable offence is under
பிடியாணை வேண்டாக் குற்றம் பற்றிய வழக்கு பதிவு செய்வது குறித்து கூறும் சட்டப்பிரிவு

(A) Section 173
பிரிவு 173

(B) Section 174
பிரிவு 174

(C) Section 175
பிரிவு 175

(D) Section 176
பிரிவு 176

45. Under Section 178 of BNSS 2023, Preliminary inquiry into the commission of offence can be conducted by the
பா.நா.சு.சன்ஹிதா 2023ன் பிரிவு 178 கீழ், குற்றம் மீதான முதல்நிலை விசாரணை நடத்த அதிகாரம் பெற்ற நபர்

(A) Magistrate having jurisdiction to take cognizance
புலன்விசாரணைக்கு அதிகார பெற்ற குற்றவியல் நடுவர்

(B) Under the order of such magistrate, any subordinate Magistrate
அத்தகைய குற்றவியல் நீதித்துறை நடுவர் உத்தரவின் கீழ், எந்தவொரு கீழமை நீதிபதியும்

(C) Police officer
காவல் அதிகாரி

(D) Both (A) and (B)
(A) மற்றும் (B) இரண்டும்

46. The power to require attendance of the person acquainted with the facts and circumstances of the case under Section 179 of BNSS 2023, requires a notice
பா.நா.சு.சன்ஹிதா 2023ன் பிரிவு 179 கீழ், வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகள் தெரிந்த நபரை சாட்சியாக ஆஜராக அறிவிப்பினை கீழ்க்கண்ட வழிகளில் தெரியப்படுத்தலாம்

(A) Through telephone
தொலைபேசி மூலம்

(B) In writing
எழுத்து மூலம்

(C) May be oral
வாய்மொழியாக

(D) May be oral or in writing
வாய்மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ இருக்கலாம்

47. The investigating officer under Section 179 of BNSS 2023 cannot require the attendance of a male at a place other than the place of his residence who is under the age of

பா.நா.சு.ச 2023ன் பிரிவு 179 பிரிவின் கீழ் விசாரணை அதிகாரி, ———— வயதுக்குட்பட்ட நபரை, அவர் வசிக்கும் இடத்தைத் தவிர, வேறு இடத்தில் ஆஜராகக் கோர முடியாது.

(A) 15 years
15 ஆண்டுகள்

(B) 18 years
18 ஆண்டுகள்

(C) 21 years
21 ஆண்டுகள்

(D) 14 years
14 ஆண்டுகள்

48. A person can be summoned as a witness under Section 179 of BNSS 2023 by

பா.நா.சு.ச 2023ன் பிரிவு 179 கீழ் ஒரு நபரை சாட்சியாக அழைக்க அதிகாரம் பெற்றவர்

(A) Any Police officer
ஏதேனும் ஓர் காவல் அதிகாரி

(B) Station House officer
காவல் நிலைய அதிகாரி

(C) Investigating officer
விசாரணை அதிகாரி

(D) All the above
மேலே சொன்ன மூவரும்

49. A confession under Section 183 of BNSS 2023 can be recorded by

பா.நா.சு.ச 2023ன் பிரிவு 183 கீழ் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ய அதிகாரம் பெற்றவர்

(A) Metropolitan Magistrate
பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவர்

(B) Judicial Magistrate
நீதித்துறை நடுவர்

(C) Executive Magistrate
நிர்வாகத்துறை நடுவர்

(D) Both (A) and (B)
(A) மற்றும் (B) இரண்டும்

50. Under Section 479 of BNSS 2023 under trial prisoner can be detained for maximum period not exceeding __________ of the maximum punishment specified for that offence.

பா.நா.சு.ச 2023ன் பிரிவு 479 கீழ், விசாரணைக் கைதி, அந்தக் குற்றத்திற்காகக் குறிப்பிடப்பட்ட அதிகபட்ச தண்டனையின் ———— க்கு மிகாமல் அதிகபட்ச காலம் சிறைக்காவலில் வைக்கப்படலாம்.

(A) $1/4^{th}$
1/4

(B) $1/2^{th}$
1/2

(C) $3/4^{th}$
3/4

(D) Whole period
முழு காலம்

51. A sentence of Imprisonment for a term of 10 years may be passed by
10 ஆண்டுகள் சிறைத்தண்டனை உத்தரவு வழங்க அதிகாரம் படைத்தவர்

(A) Magistrate of the First Class
முதல் வகுப்பு குற்றவியல் நீதித்துறை நடுவர்

(B) Chief Judicial Magistrate
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்

(C) Assistant Sessions Judge
உதவி அமர்வு நீதிபதி

(D) Chief Metropolitan Magistrate
பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவர்

52. Under which section of BNSS 2023 Police may arrest without warrant
பா.நா.சு.ச 2023ன் எந்தப் பிரிவின் கீழ், காவல்துறை பிடியாணை இல்லாமல் கைது செய்யலாம்?

(A) Section 36(1)
பிரிவு 36(1)

(B) Section 37(2)
பிரிவு 37(2)

(C) Section 35(1)
பிரிவு 35(1)

(D) Section 36(2)
பிரிவு 36(2)

53. In a proceeding under Section 126 of BNSS an Executive Magistrate may require to execute a bond for keeping peace for such period not exceeding ———— as Magistrate think fit.

பா.நா.சு.சன்ஹிதாவின் பிரிவு 126ன் கீழ் ஒரு நிர்வாகத்துறை நடுவரின் ஒரு நடவடிக்கையில், ———— க்கு மிகாமல் அமைதி காக்க ஒரு பத்திரத்தை எழுதி தரவேண்டும் என்று உத்தரவிடலாம்.

(A) One year
ஒரு வருடம்

(B) Two years
இரண்டு ஆண்டுகள்

(C) Three years
மூன்று ஆண்டுகள்

(D) Six months
ஆறு மாதங்கள்

54. Under section 125 of BNSS 2023, which of the following courts has power to order the offender to execute a bond

பா.நா.சு.ச 2023ன் பிரிவு 125ன் கீழ், ஒரு குற்றவாளி பத்திரத்தை எழுதி தர வேண்டும் என்று உத்தரவிட பின்வரும் நீதிமன்றங்களில் எந்த நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது?

(A) Session Court
அமர்வு நீதிமன்றம்

(B) Magistrate of First class
முதல் வகுப்பு குற்றவியல் நீதித்துறை நடுவர்

(C) Appellate or Revisional Court
மேல்முறையீடு அல்லது சீராய்வு நீதிமன்றம்

(D) All the above
மேலே உள்ள அனைத்தும்

55. Under which Section of BNSS 2023, an accused person can himself be a competent witness?

பா.நா.சு.சன்ஹிதா 2023ன் எந்தப் பிரிவின் கீழ், குற்றம் சாட்டப்பட்ட நபர் தானே சாட்சியளிக்க முடியும்?

(A) Section 353
பிரிவு 353

(B) Section 350
பிரிவு 350

(C) Section 348
பிரிவு 348

(D) Section 347
பிரிவு 347

56. Section 337 of BNSS 2023 enables the accused
பா.நா.சு.ச 2023ன் பிரிவு 337-ன் கீழ், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(A) Withdrawal from prosecution
அரசு தரப்பு வழக்கை திரும்பப் பெறுதல்

(B) Against double prosecution
இரட்டை இடர்லிருந்து பாதுகாப்பு

(C) Release on probation of good conduct
நன்னடத்தை அடிப்படையில் விடுதலை

(D) Compounding of offence
சமரசம் செய்து கொள்ளுதல்

57. Procedure for Summary Trial is provided under
சுருக்கமுறை விசாரணைக்கான நடைமுறை குறித்த சட்டப்பிரிவுகள்

(A) Sections 251-259
பிரிவுகள் 251-259

(B) Sections 225-237
பிரிவுகள் 225-237

(C) Sections 283-288
பிரிவுகள் 283-288

(D) Sections 285-290
பிரிவுகள் 285-290

58. Private person may arrest any person who commits __________ offence in his presence.
தனிப்பட்ட நபர் தனது முன்னிலையில் —————— குற்றத்தைச் செய்யும் எந்தவொரு நபரையும் கைது செய்யலாம்.

(A) Non-cognizable and bailable
பிடியாணை வேண்டும், பிணையில் விடும் குற்றம்

(B) Non-cognizable
பிடியாணை வேண்டும் குற்றம்

(C) Bailable
பிணையில் விடும் குற்றம்

(D) Cognizable and non-bailable
பிணையில் விடா, பிடியாணை வேண்டாக் குற்றம்

59. Court of sessions has the original jurisdiction to take cognizance of offences by virtue of
அமர்வு நீதிமன்றத்தின் மூலம் குற்றங்களை புலன் கொள்வதற்கான அசல் அதிகார வரம்பு கீழ்க்கண்ட பிரிவில் கூறப்பட்டுள்ளது.

(A) Section 210
பிரிவு 210

(B) Section 213
பிரிவு 213

(C) Section 212
பிரிவு 212

(D) Section 211
பிரிவு 211

60. Taking cognizance is a __________ function.
குற்றங்களை புலன் கொள்வது ஒரு ―――――― செயல்பாடாகும்.

(A) Judicial
நீதித்துறை

(B) Administrative
நிர்வாகம்

(C) Supervisory
மேற்பார்வை

(D) Managerial
மேலாண்மை

61. Magistrate may take cognizance based on
நீதித்துறை நடுவர் இதன் அடிப்படையில் புலன் கொள்ளலாம்.

(A) Police report
காவல் அறிக்கை

(B) Complainant
குற்றமுறையீடு

(C) Suomoto
தாமாக முன்வந்து

(D) All the above
மேலே உள்ள அனைத்தும்

62. On receipt of complaint the magistrate has the jurisdiction to
குற்றமுறையீடு பெறப்பட்டவுடன் நீதித்துறை நடுவர்

(A) Conduct enquiry himself
தானே விசாரணை நடத்தலாம்

(B) Direct the police to investigate
புலன் விசாரணைக்கு காவல்துறைக்கு உத்தரவிடலாம்

(C) Both (A) and (B)
(A) மற்றும் (B) இரண்டும்

(D) Either (A) or (B)
(A) அல்லது (B)

63. Under Section 478 of BNSS 2023, bail can be granted by
பா.நா.சு.ச 2023 பிரிவு 478ன் கீழ், பிணை வழங்க அதிகாரம் படைத்தவர்.

(A) Police
காவல் அதிகாரி

(B) Court
நீதிமன்றம்

(C) Both Court and Police
நீதிமன்றம் மற்றும் காவல்துறை இரண்டும்

(D) Prosecutor
அரசு வழக்குரைஞர்

64. Under Section 348 of BNSS, a witness can be called by
பா.நா.சு.ச பிரிவு 348ன் கீழ், ஒரு சாட்சியை அழைக்க யாருக்கு அதிகாரம் உள்ளது?

(A) Prosecution
அரசு தரப்பு

(B) Defence
குற்றச்சாட்டப்பட்டவரின் தரப்பு

(C) Court
நீதிமன்றம்

(D) All the above
மேலே உள்ள அனைத்தும்

65. Compensation to the victim can be granted on
பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு வழங்க, குற்றச்சாட்டப்பவருக்கு ———— வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

(A) Conviction
தண்டனை

(B) Acquittal
விடுதலை

(C) Discharge
விடுவிப்பு

(D) Bail
பிணை

66. Under which Section of BNSS 2023, non-appearance of complainant is dealt?
பா.நா.சு.ச, 2023-ன் எந்த பிரிவு முறையிடுபவர் வாராமையை பற்றி கூறுகிறது?

(A) Section – 273
பிரிவு – 273

(B) Section – 275
பிரிவு – 275

(C) Section – 277
பிரிவு – 277

(D) Section – 279
பிரிவு – 279

67. Section – 2023 of BNSS deals with the offence committed
பா.நா.சு.ச, 2023-ன் கீழ் எந்த குற்றம் கூறப்பட்டுள்ளது.

(A) by letters
கடிதங்கள் மூலம் குற்றம்

(B) by electronic communications
மின்னணு தொடர்பு மூலம் குற்றம்

(C) on journey or voyage
பயணம் (அ) நீள்பயணத்தின் பொழுது குற்றம்

(D) by verbal communication
வார்த்தை மூலம் குற்றம்

68. As per the definition under Section 2(1)(Y) of BNSS "victim" includes victim's
பா.நா.சு.ச-வின் பிரிவு 2(1)(Y)ன் கீழ் உள்ள வரையறையின்படி "பாதிக்கப்பட்டவர்" கீழ்க்கண்டவர்களையும் உள்ளடக்கியது

(A) Guardian
பாதுகாவலர்

(B) Guardian or legal heir
பாதுகாவலர் அல்லது சட்டப்பூர்வ வாரிசு

(C) Neighbour
பக்கத்து வீட்டுக்காரர்

(D) Close friend
நெருங்கிய நண்பர்

69. A Police officer can arrest any person without warrant for a
கீழ்க்கண்ட குற்றத்திற்கு ஒரு காவல்துறை அதிகாரி எந்த நபரையும் பிடியாணை இல்லாமல் கைது செய்யலாம்.

(A) Cognizable offence
பிடியாணை வேண்டாக் குற்றம்

(B) Compoundable offence
பிடியாணை வேண்டும் குற்றம்

(C) Summons case
அழைப்பாணை வழக்கு

(D) Warrant case
பிடியாணை வழக்கு

70. Magistrate is not empowered to conduct
குற்றவியல் நீதித்துறை நடுவரால் கீழ்க்கண்ட எது நடத்த அதிகாரமில்லை?

(A) Trial
நீதி விசாரணை

(B) Judicial proceeding
வழக்கு விசாரணை

(C) Inquest
இறப்பாய்வு

(D) Investigation
புலன் விசாரணை

71. Maintenance of case diary by the investigating officer is mandatory under
எந்த பிரிவின் கீழ் புலன்விசாரணை அதிகாரியால் வழக்கு நாட்குறிப்பைப் பராமரிப்பது கட்டாயமாகும்?

(A) Section 182
பிரிவு 182

(B) Section 187
பிரிவு 187

(C) Section 192
பிரிவு 192

(D) Section 194
பிரிவு 194

72. As per Section 194 of BNSS, Inquest can be conducted by
பா.நா.சு.ச பிரிவு 194ன் படி, இறப்பாய்வு நடத்த அதிகாரம் படைத்தவர்

(A) Magistrate
நீதித்துறை நடுவர்

(B) Prosecutor
அரசு வழக்குரைஞர்

(C) Police officer
காவல் அதிகாரி

(D) Complainant
குற்ற முறையீட்டாளர்

73. Section 187 of BNSS authorises remand of an accused in
பா.நா.சு.ச பிரிவு 187ன் குற்றம் சாட்டப்பட்டவரை எவ்வகை காவலில் வைக்க அங்கீகரிக்கிறது?

(A) Judicial custody
நீதிமன்ற காவல்

(B) Police custody
போலீஸ் காவல்

(C) Either judicial or police custody
நீதித்துறை அல்லது போலீஸ் காவல்

(D) Restoration to parents
பெற்றோரின் பாதுகாப்பு

74. Police custody can be further extended beyond 15 days by
போலீஸ் காவலை 15 நாட்களுக்கு மேல் நீட்டிக்க அதிகாரம் படைத்தவர்

(A) Magistrate
நீதித்துறை நடுவர்

(B) Sessions court
அமர்வு நீதிமன்றம்

(C) High court
உயர் நீதிமன்றம்

(D) None of the above
மேற்சொன்ன எதுவுமில்லை

75. After dismissal of a complaint under Section 226 BNSS, a fresh similar complaint on same facts is
பா.நா.சு.ச பிரிவு 226ன் கீழ் ஒரு புகாரை தள்ளுபடி செய்த பிறகு, அதே பொருண்மைகளின் மீது ஒரு புதிய புகார் கொடுப்பது

(A) Allowed
அனுமதிக்கப்பட்டது

(B) Barred
தடைசெய்யப்பட்டது

(C) Entertained only in exceptional cases
விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மட்டுமே அனுமதிக்கப்படுகிறது

(D) Not barred on any circumstances
எந்த சூழ்நிலையிலும் தடையில்லை

76. Criminal Rules of Pratice, 2019 came into effect on shall be made by the
குற்றவியல் நடைமுறை விதிகள், 2019 எப்போது அமலுக்கு வந்தது?

(A) 1st January 2019
ஜனவரி 1, 2019

(B) 1st April 2019
ஏப்ரல் 1, 2019

(C) 1st January 2020
1 ஜனவரி 2020

(D) 1st June 2020
ஜூன் 1, 2020

77. As per Rule 9 of Criminal Rules of Pratice, 2019 an application for conduct of Test Identification parade shall be made by the
குற்றவியல் நடைமுறை விதிகள், 2019 விதி 9ன் படி, சோதனை அடையாள அணிவகுப்பை நடத்துவதற்கான விண்ணப்பம் யார் கொடுக்க வேண்டும்?

(A) Investigating officer
புலன்விசாரணை அதிகாரி

(B) Prosecutor
அரசு வழக்குரைஞர்

(C) Any Police officer
ஏதேனும் ஒரு காவல் அதிகாரி

(D) Complainant
குற்ற முறையீட்டாளர்

78. Under Rule 27 of Criminal Rules of Pratice, 2019, Every Advocate defending the accused person, who is not in custody, in a criminal proceeding in any Court shall file vakalatnama containing his
குற்றவியல் நடைமுறை விதிகள், 2019 விதி 27ன் கீழ், காவலில் இல்லாத குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு வாதாடும் ஒவ்வொரு வழக்கறிஞரும், நீதிமன்றத்தில் வக்காலத்து தாக்கல் செய்யும் போது கீழ்க்காணும் விபரங்களை தெரிவிக்க வேண்டும்.

(A) Enrollment Number
பதிவு எண்

(B) Address for service
சேவைக்கான முகவரி

(C) Mobile Number
அலைபேசி எண்

(D) Both (A) and (B)
(A) மற்றும் (B) இரண்டும்

79. Which Rule of Criminal Rules of Pratice, 2019 deals with dress code of Advocate Clerks?
குற்றவியல் நடைமுறை விதிகள், 2019ன் எந்த விதி, வழக்கறிஞர் எழுத்தர்களின் ஆடைக் குறியீடுகளைப் பற்றிக் கூறுகிறது ?

(A) Rule 285
விதி 285

(B) Rule 288
விதி 288

(C) Rule 289
விதி 289

(D) Rule 290
விதி 290

80. Which Rule of Criminal Rules of Pratice, 2019 deals with Maintainance a daily diary register in the form prescribed by the e-Committee of the Supreme Court of India?
இந்திய உச்ச நீதிமன்றத்தின் மின் கமிட்டியால் 2019 ல் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் தினசரி நாட்குறிப்புப் பதிவேட்டைப் பராமரிப்பது தொடர்பான குற்றவியல் நடைமுறை விதிகளின் எந்த விதி கூறுகிறது ?

(A) Rule 64
விதி 64

(B) Rule 65
விதி 65

(C) Rule 67
விதி 67

(D) Rule 68
விதி 68

122/DD/25

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## THE CIVIL AND CRIMINAL JUDICIAL TEST FOR MEMBERS OF THE JUDICIAL DEPARTMENT — PART - I

(With Books)

Maximum Time : 30 minutes

Maximum Marks : 20

## *IMPORTANT INSTRUCTIONS*

## DESCRIPTIVE TYPE

**விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்**

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).

   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

[Turn over

**Answer any FOUR of the following.**

எவையேனும் நான்கு கேள்விகளுக்கு விடையளிக்கவும். **(4 × 5 = 20)**

1. Explain the procedure for appointment of Public Prosecutor.

   ஒரு அரசு வழக்குரைஞர் நியமன விதிமுறைகளை விளக்குக.

2. List out the rights available to the arrested person.

   கைது செய்யப்பட்ட நபருக்குரிய உரிமைகளை விவரிக்க.

3. Discuss the provisions of the Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023 relating to Maintenance of wife, Children and Parents.

   மனைவி, குழந்தைகள் மற்றும் பெற்றோருக்கான வாழ்க்கைப் பொருளுதவி குறித்து பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 2023 சட்ட பிரிவுகளை விளக்குக.

4. State the procedure to be followed by a magistrate while recording the confession.

   குற்ற ஏற்புரையை பதிவு செய்யும் போது குற்றவியல் நடுவர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை எடுத்துரைக்க.

5. Discuss the procedure followed by the Magistrate in the trial of Summons Case.

   அழைப்பாணை வழக்குகளில் ஒரு நீதித்துறை நடுவர் பின்பற்ற வேண்டிய விசாரணை நடைமுறைகளை விவாதிக்க.

6. Explain the law relating to appeal in criminal cases.

   குற்ற வழக்குகளில் மேல்முறையீட்டிற்கான சட்ட வகையங்களை விளக்குக.

---